| | |
|---|---|
| PLACE | THIRUVELLIYANGUDI |
| PRESENT NAME | THIRUVELLIYANGUDI |
| BASE TOWN | KUMBAKONAM |
| DISTANCE | 20 KM |
| MOOLAVAR | KOLAVILLIRAMAN |
| THIRUKKOLAM | KIDANTHA |
| THIRUMUGAMANDALAM | EAST |
| UTHSAVAR | SRUNGARASUNDARAN |
| THAYAR | MARAGADAVALLI |
| MANGALASASANAM | 10 PAASURAMS |
| PRATYAKSHAM | SUKRAN,BRAHMA,MARGANDEYAR |
| THEERTHAM | SUKRA THEERTAHM |
| VIMANAM | PUSHKALAVARTHAKA |
| NAMAVALI | Sri Maragadhavalli nayiga sameda Sri Srungarasundara Danushbani Ramaya parabramane namaha |
| STHALA VIRUKSHAM | SEVVAZHAI |





மகாவிஷ்ணு வாமன அவதாரம் எடுத்து மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டார். வந்திருப்பது இறைவன் என்பதை அறியாத மன்னன் தாரை வார்த்து கொடுக்க சம்மதிக்கிறான். ஆனால், உண்மைநிலை அறிந்த அசுர குல குரு சுக்கிராச்சாரியார், தாரை வார்க்கும் செம்புக்குடத்தின் துவாரத்தை ஒரு வண்டாக உருவெடுத்து அடைத்து விட்டார். குருவின் இந்த செயல் அறிந்த பகவான் ஒரு குச்சியால் துவாரம் வழியாக குத்த, ஒரு கண்ணை இழக்கிறார் சுக்கிரன்.ஒளியிழந்த கண்ணுடன் பல தலங்களுக்கு சென்று வழிபட்டு கடைசியாக இத்தலத்து பெருமாளை வழிபட்டு மீண்டும் பார்வை பெற்றார். இதனால் தான் இத்தலம் வெள்ளி(சுக்கிரன்)யங்குடி என அழைக்கப்படுகிறது.சுக்கிரன் இத்தலத்தில் வந்து தவம் செய்வதற்கு மற்றொரு காரணமும் உண்டு. தேவ சிற்பியான விஸ்வகர்மா பெருமாளுக்கு அழகாக கோயில்களை கட்டி முடித்தார். இதே போல் தன்னால் கோயில்கள் கட்ட முடியவில்லையே என அசுர குல சிற்பி மயன் வருத்தப்பட்டு பிரம்மனிடம் வேண்டினார். அதற்கு பிரம்மா,""இத்தலத்தில் கடும் தவம் செய்தால் பெருமாள் அருளால் எல்லாம் நல்லபடியாக நடக்கும்,'' என கூறினார். மயனின் தவத்தில் மகிழ்ந்த பெருமாள் சங்கு சக்ரதாரியாக காட்சி கொடுத்தார். ஆனால் மயன்,""தனக்கு இந்த தரிசனத்திற்கு பதில், ராமாவதார காட்சி வேண்டும்,''என்றான். தன் கரத்திலிருந்த சங்கு சக்கரத்தை கருடாழ்வாரிம் கொடுத்து விட்டு கோலவில்லி ராமனாக வில் அம்புகளுடன் தரிசனம் தந்தார் பகவான். இப்படிப்பட்ட பெருமைக்குரிய தலத்தில் தவமிருக்க விரும்பி இங்கு வந்தார் சுக்கிராச்சாரியார். இதன் காரணமாகவும் இது "**வெள்ளியங்குடி**' ஆயிற்று.







இந்த பெருமாளை தரிசித்தால் 108 திருப்பதிகளையும் தரிசித்த பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. தனக்கு கண்ணில் ஒளி தந்த பெருமாளுக்கு நன்றி செலுத்தும் வகையில் , சுக்கிர பகவான் அணையா தீபமாக இத்தலத்தில் இரவு பகலாக பிரகாசித்து கொண்டிருக்கிறார். எனவே இத்தலம் நவக்கிரகத்தில் சுக்கிரத்தலமாக போற்றப்படுகிறது.

108 திருப்பதிகளுள் இங்கு மட்டும் தான் கருடாழ்வார் சங்கு சக்கரம் ஏந்தி 4 திருக்கரங்களுடன் அருள்பாலிக் கிறார்.இத்தலத்தில் கருங்கல் தரையில் செங்கதலி வாழை முளைத்து வருடத்திற்கு ஒரு தார் போட்டு வாழையடி வாழையாக இருந்து வரும் காட்சியை இன்றும் காணலாம்.

இத்தலத்தின் அருகில் சேங்கானூர் என்ற ஊர் உள்ளது. இதுதான் வைணவ மேதை பெரியவாச்சான் பிள்ளையின் அவதார தலமாகும். காஞ்சிப்பெரியவர் இத்தலத்தில் தங்கி கோயில் திருப்பணி செய்துள்ளார்.

| திவ்யதேசம் 017<br>திருவெள்ளியங்குடி (வெள்ளியங்குடி) | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1338-1347 |
| மொத்த பாசுரங்கள் | 10 |

### திருமங்கையாழ்வார்
### திருவெள்ளியங்குடி

1338 ஆய்ச்சியர் அழைப்ப வெண்ணெய் உண்டு ஒருகால் ஆல் இலை வளர்ந்த எம் பெருமான்
பேய்ச்சியை முலை உண்டு இணை மருது இறுத்து பெரு நிலம் அளந்தவன் கோயில்-
காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கும் எங்கும் ஆம் பொழில்களின் நடுவே
வாய்த்த நீர் பாயும் மண்ணியின் தென்பால்-திருவெள்ளியங்குடி-அதுவே (1)

1339 ஆநிரை மேய்த்து அன்று அலை கடல் அடைத்திட்டு அரக்கர்-தம் சிரங்களை உருட்டி
கார் நிறை மேகம் கலந்தது ஓர் உருவக் கண்ணனார் கருதிய கோயில்-
பூ நிரைச் செருந்தி புன்னை முத்து அரும்பி பொதும்பிடை வரி வண்டு மிண்டி
தேன் இரைத்து உண்டு அங்கு இன் இசை முரலும்-திருவெள்ளியங்குடி-அதுவே (2)

1340 கடு விடம் உடைய காளியன் தடத்தைக் கலக்கி முன் அலக்கழித்து அவன்-தன்
படம் இறப் பாய்ந்து பல் மணி சிந்தப் பல் நடம் பயின்றவன் கோயில்-
பட அரவு அல்குல் பாவை நல்லார்கள் பயிற்றிய நாடகத்து ஒலி போய்
அடை புடை தழுவி அண்டம் நின்று அதிரும்-திருவெள்ளியங்குடி-அதுவே (3)

1341 கறவை முன் காத்து கஞ்சனைக் காய்ந்த காளமேகத் திரு உருவன்
பறவை முன் உயர்த்து பாற்கடல் துயின்ற பரமனார் பள்ளிகொள் கோயில்-
துறைதுறைதோறும் பொன் மணி சிதறும் தொகு திரை மண்ணியின் தென்பால்
செறி மணி மாடக் கொடி கதிர் அணவும்-திருவெள்ளியங்குடி-அதுவே (4)

1342 பாரினை உண்டு பாரினை உமிழ்ந்து பாரதம் கையெறிந்து ஒருகால்
தேரினை ஊர்ந்து தேரினைத் துரந்த செங் கண் மால் சென்று உறை கோயில்-
ஏர் நிரை வயலுள் வாளைகள் மறுகி எமக்கு இடம் அன்று இது என்று எண்ணி
சீர் மலி பொய்கை சென்று அணைகின்ற-திருவெள்ளியங்குடி-அதுவே (5)

1343 காற்றிடைப் பூளை கரந்தென அரந்தை உற கடல் அரக்கர்-தம் சேனை

கூற்றிடைச் செல்ல கொடுங் கணை துரந்த கோல வில் இராமன்-தன் கோயில்-
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள் ஊழ்த்து வீழ்ந்தன உண்டு மண்டி
சேற்றிடைக் கயல்கள் உகள் திகழ் வயல் சூழ்-திருவெள்ளியங்குடி-அதுவே (6)

1344 ஒள்ளிய கருமம் செய்வன் என்று உணர்ந்த மாவலி வேள்வியில் புக்கு
தெள்ளிய குறள் ஆய் மூவடி கொண்டு திக்கு உற வளர்ந்தவன் கோயில்-
அள்ளி அம் பொழில்வாய் இருந்து வாழ் குயில்கள் அரி அரி என்று அவை
அழைப்ப
வெள்ளியார் வணங்க விரைந்து அருள்செய்வான்-திருவெள்ளியங்குடி-அதுவே (7)

1345 முடி உடை அமரர்க்கு இடர் செய்யும் அசுரர்-தம் பெருமானை அன்று அரி ஆய்
மடியிடை வைத்து மார்வம் முன் கீண்ட மாயனார் மன்னிய கோயில்-
படியிடை மாடத்து அடியிடைத் தூணில் பதித்த பல் மணிகளின் ஒளியால்
விடி பகல் இரவு என்று அறிவு-அரிது ஆய-திருவெள்ளியங்குடி-அதுவே (8)

1346 குடி குடி ஆகக் கூடி நின்று அமரர் குணங்களே பிதற்றி நின்று ஏத்த
அடியவர்க்கு அருளி அரவு-அணைத் துயின்ற ஆழியான் அமர்ந்து உறை கோயில்-
கடி உடைக் கமலம் அடியிடை மலர கரும்பொடு பெருஞ் செந்நெல் அசைய
வடிவு உடை அன்னம் பெடையொடும் சேரும் வயல்-வெள்ளியங்குடி-அதுவே (9)

1347 பண்டு முன் ஏனம் ஆகி அன்று ஒருகால் பார் இடந்து எயிற்றினில் கொண்டு
தெண் திரை வருடப் பாற்கடல் துயின்ற திருவெள்ளியங்குடியானை
வண்டு அறை சோலை மங்கையர் தலைவன் மான வேல் கலியன் வாய் ஒலிகள்
கொண்டு இவை பாடும் தவம் உடையார்கள் ஆள்வர்-இக் குரை கடல் உலகே (10)

**Festivals :** Sri Ramanavami, Gokulashtami, Vaigunda Ekadasi

**Temple Timings:** 8.00 am to 12.00 pm
5.00 pm to 07.00 pm

**Address :** Arulmigu Kolavilli Ramar Thirukkoil, Thiruvelliyangudi,
Kumbakonam – 612 102.
Thanjavur District, Tamil Nadu.

**Phone :** 0435 – 2450118 **Mobile :** 94433 96212

**Location :** Catch Kumbakonam to Anakkarai bus. Get down at Cholapuram. From

Cholapuram you have to travel 6 kms to reach Thiruvelliyangudi.

Direct Town Bus from Kumbakonam – Route No: 2

**Nearest Railway Station:** Aduthurai

**Nearest Airport:** Trichy

**Hotels at Kumbakonam:**

Hotel Green Park Ph: 0435 – 2403912 / 13 / 14

| | |
|---|---|
| Hotel Chellas: | 0435 – 2430336 |
| Hotel Adithya: | 0435 – 2421794 / 95 |
| Hotel Le Garden: | 0435 – 2402526 |
| Hotel Rayas: | 0435 – 2432032 |
| Hotel Paradise: | 0435 - 2416469 |

Courtesy: Dinamalar &
Sri Seshadri Swamy
Dr.V Sadagopan Swamy